Updated March 14, 2022 Tamil
DOH 820-131

# கோவிட்-19 தொற்றுக்காலத்தின் போது முகக்கவசம் அணிவதற்கான வழிகாட்டுதல்

## மார்ச் 14, 2022 மாற்றங்களின் சுருக்கம்

- முகக்கவசம் பற்றிய சுகாதார செயலாளரின் உத்தரவு (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் ஆளுநர் பிரகடனம் (ஆங்கிலத்தில் மட்டும்) மாற்றங்களுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்டது

## அறிமுகம்

நீங்கள் முகக்கவசம் அணியும்போது, உங்களையும், உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களையும் பாதுகாக்க உதவுகிறீர்கள். இந்த தொற்றுநோய்க்கு பதில்வினையாற்றுவதில், சில இடங்கள் மற்றும் சில நேரங்களில் முகக்கவசம் அணிதல் கோவிட்-19 தொற்று நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவதைக் குறைக்கிறது, உயிர்களைக் காப்பாற்றவும் மற்றும் பொருளாதாரத்தைப் பாதுகாப்பாகவும், புத்திசாலித்தனமாகவும் வைத்திருக்கவும் உதவுகிறது என்பதை நாங்கள் அறிந்து கொண்டுள்ளோம். குறிப்பாக தொற்று பரவும் அளவுகள் அதிகமாக இருக்கும் போது, தடுப்பூசிகளைப் பற்றி புதுப்பித்த நிலையில் இருப்பது மற்றும் முகக்கவசங்களை அணிவது போன்ற படிப்படியான தடுப்புக்கான உத்திகளைக் கடைபிடிப்பது கடுமையான நோய்களைத் தடுக்கவும் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பில் சிரமம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளையும் குறைக்கிறது.

Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) இன் படி, சில முகக்கவசங்கள் மற்றும் சுவாசக் கருவிகள் மற்றவையை விட அதிக அளவிலான பாதுகாப்பை வழங்குகின்றன, மேலும் சிலவற்றை அணிவதற்கு சிரமமாகவோ அல்லது தொடர்ந்து அணிவதோ மற்றவையை விட கடினமாக இருக்கலாம். உங்களுக்கு வசதியாக உள்ள மற்றும் நன்றாகப் பாதுகாப்பை வழங்கும் நன்கு-பொருந்தும் முகக்கவசத்தை அணிவது அல்லது சுவாசக் கருவியை அணிவது மிகவும் முக்கியம் ஆகும். முகக்கவசங்கள் மற்றும் சுவாசக் கருவிகளின் வகைகள் பற்றிய கூடுதல் தகவல்களை CDC இன் வலைப்பக்கத்தில் காணலாம்.

ஒரு முகக்கவசத்தை அணிய இயலாத வகையில் வளர்ச்சி, நடத்தை அல்லது மருத்துவ நிலைமைகளைக் கொண்டவர்கள் ஒரு துணித் திரையுடன் கூடிய முகக்கவசத்தைப் பயன்படுத்தலாம். குழந்தை பராமரிப்பு மையம், தினப்பராமரிப்பு முகாம் மற்றும் K-12 பள்ளிகளில் உள்ள குழந்தைகள் நன்கு-பொருந்தும் முகக்கவசத்தை அணிவதற்கு சிரமமாக இருந்தால் ஒரு துணித் திரையுடன் கூடிய முகக்கவசத்தைப் பயன்படுத்தலாம். K-12 பள்ளிகள், குழந்தை பராமரிப்பு, ஆரம்பநிலைக் கற்றல், இளைஞர் மேம்பாடு மற்றும் பகல் நேர முகாம் நிகழ்ச்சிகள் (தமிழ்) ஆகியவைகளில் முகக்கவசம் அணிவதற்கான Department of Health (DOH, சுகாதாரத்துறை) இன் வழிகாட்டுதலைப் பார்க்கவும். கூடுதலாக, மேலும் தகவல்களுக்கு, CDC இன் குறிப்பிட்ட மக்கள்

குழுக்களுக்கான பரிசீலனைகள் பகுதியைப் பார்க்கவும். கூடுதலாக, சுவாசக் குழாய்கள் அல்லது துவாரங்கள் அல்லது ஒற்றை அடுக்கு கைக்குட்டைகள் மற்றும் காலுறைகளுடன் முகக்கவசங்களைப் பயன்படுத்த DOH பரிந்துரைக்கவில்லை.

பணியிடத்தில், சில குறிப்பிட்ட வகை முகக்கவசம் அல்லது சுவாசக் கருவிகள் தேவைப்படலாம். Washington State Department of Labour & Industries (L&I, வாஷிங்டன் மாகாண தொழிலாளர் மற்றும் தொழில்துறைகள்) (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் வாஷிங்டன் மாகாண Department of Health (DOH, மாகாண சுகாதாரத் துறை) ஆகியவைகளின் மூலம் வெளியிடப்பட்ட வழிகாட்டுதலின்படி வெளியேற்ற வால்வுகள் கொண்ட சுவாசக் கருவிகள் பயன்படுத்தப்படலாம்.

முகக்கவசங்கள் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் பட்டியலுக்கு, முகக்கவசங்கள் பற்றிய DOH இன் வலைதளத்தை (ஆங்கிலத்தில் மட்டும்) பார்வையிடவும்.

## தற்போதைய ஆணைகள் மற்றும் சுகாதார உத்தரவுகள்

தற்போதைய பொது உத்தரவுகளின் படி கீழே பட்டியலிடப்பட்டுள்ள சில அமைப்புகளில் மக்கள் முகக்கவசங்களை அணிய வேண்டும்:

- சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள்
- சீர்திருத்தம் மற்றும் சிறை அமைப்புகள் (வயது வந்தோர் சிறைச்சாலைகள் மற்றும் சிறைகள்)
- பொது போக்குவரத்து (ஆங்கிலத்தில் மட்டும்)

### வாஷிங்டன் மாகாண Department of Health-இன் உத்தரவு

வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் மற்றும் விலக்குகளுடன் தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல், Secretary of Health Mask Order (முகக்கவசம் பற்றிய சுகாதார செயலாளரின் உத்தரவு) (ஆங்கிலத்தில் மட்டும்)-இன் படி, வாஷிங்டனியர்கள் சுகாதார அமைப்புகள் மற்றும் வயது வந்தோருக்கான சிறை மற்றும் சிறை அமைப்புகளில் முகக்கவசங்களை அணிய வேண்டும். இந்த உத்தரவுக்கு இணங்குவதற்கு மக்கள் தனித்தனியாகப் பொறுப்பாவார்கள்; இருப்பினும், வணிகங்கள் தங்கள் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் இதைச் செயல்படுத்துவதற்கான பொறுப்புகளையும் கொண்டிருக்கின்றன. கூடுதல் தகவல்களுக்கு கீழே உள்ள உத்தரவுகளைப் பார்க்கவும்.

### ஃபெடரல் உத்தரவு

பொது போக்குவரத்திற்கான நிபந்தனைகள் Centers for Disease Control and Prevention order (நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு உத்தரவுகளுக்கான மையங்களில்) (ஆங்கிலத்தில் மட்டும்) காணப்படுகின்றன. இந்த உத்தரவின்படி, விமானங்கள், கப்பல்கள், படகுகள், ரயில்கள், சுரங்கப்பாதைகள், பேருந்துகள், டாக்சிகள் மற்றும் பகிர்ந்து கொள்ளும்-சவாரிகள் உட்பட அனைத்து பொதுப் போக்குவரத்துகளிலும் மற்றும் போக்குவரத்து மையங்களிலும் பயணிகள் முகக்கவசம் அணிவது தேவைப்படுகிறது. பொதுப் போக்குவரத்தை இயக்குபவர்கள் அனைத்துப் பயணிகளும் ஏறும் போதும், இறங்கும் போதும், பயணத்தின் போதும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். கூடுதல்

தகவல்களை சட்ட அதிகாரிகளுக்கான CDC இன் வலைப்பக்கத்தில் காணலாம் (ஆங்கிலத்தில் மட்டும்).

பொது அல்லது தனியார் K-12 பள்ளி அமைப்புகள் அல்லது ஆரம்பகால பராமரிப்பு மற்றும் கல்வி/குழந்தை பராமரிப்பு திட்டங்களால் இயக்கப்படும் பேருந்துகள் அல்லது வேன்களில் மக்கள் முகக்கவசம் அணிய தேவையில்லை என்று CDC கூறுகிறது. அவர்களின் விருப்பப்படி, பள்ளி அமைப்புகள் மற்றும் ECE கல்வி/குழந்தை பராமரிப்பு திட்டங்கள் பேருந்துகள் அல்லது வேன்களில் மக்கள் முகக்கவசங்கள் அணிவதைத் தேர்வு செய்யலாம். பேருந்து போக்குவரத்து பற்றிய கூடுதல் தகவல்களுக்கு DOH இன் K-12 பள்ளிகள், குழந்தை பராமரிப்பு, ஆரம்பநிலைக் கற்றல், இளைஞர் மேம்பாடு மற்றும் பகல் நேர முகாம் நிகழ்ச்சிகள் ஆகியவைகளில் கோவிட்-19 பரவலை மட்டுப்படுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல் உள்ள வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்.

## வாஷிங்டன் மாகாண கவர்னர் பிரகடனம்

வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட வணிகங்களுக்கான பொறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றிய தகவல்கள் ஆளுநரின் பிரகடனம் 20-25.19 கோவிட்-19 வாஷிங்டன் ரெடி (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் பிரகடனம் 21-08 – பாதுகாப்பான பணியாளர்கள் (ஆங்கிலத்தில் மட்டும்) ஆகியவற்றில் பட்டியலிடப்பட்டுள்ளன.

## வாஷிங்டன் மாகாண தொழிலாளர் மற்றும் தொழில்துறை மற்றும் கவர்னர் பிரகடனம்

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஆளுநரின் அறிவிப்பின்படி பெரும்பாலான பணியிடங்களில் முகக்கவசங்கள் தேவையில்லை என்றாலும், தனியார் வணிகங்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் முகக்கவசங்கள் அணிந்து கொள்ளலாம். தயவுசெய்து அறைகளின் விதிமுறைகளைப் பின்பற்றவும். கூடுதலாக, ஆளுநரின் பாதுகாப்பான பணியாளர்கள் பிரகடனத்தின்(ஆங்கிலத்தில் மட்டும்) படி, உடல்நல குறைவு உள்ள சில பணியாளர்கள் அல்லது கடுமையான கோவிட்-19 ஆபத்தில் உள்ளவர்கள் முகக்கவசங்களை அணிய வேண்டியிருக்கலாம் அல்லது அணிவதைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கலாம்; தொழிலாளர்கள் தங்களையும், தங்கள் குடும்பங்கள் மற்றும் தங்கள் சமூகங்களையும் பாதுகாப்பதற்காக முகக்கவசம் அணிய உரிமை உண்டு. 2021 ஆம் ஆண்டில் சட்டமன்றம் மாற்று செனட் மசோதா 5254 ஐ நிறைவேற்றியது, இது பொது சுகாதார அவசரநிலையின் போது முகக்கவசம் அணிவதற்கான தொழிலாளியின் உரிமையைப் பாதுகாக்கிறது, மேலும் இந்த பாதுகாப்பு இப்போது Revised Code of Washington (RCW, வாஷிங்டனின் திருத்தப்பட்ட குறியீடு) 49.17.485 (ஆங்கிலத்தில் மட்டும்) இல் குறியிடப்பட்டுள்ளது. பணியிடங்களுக்கான கூடுதல் தகவல்களுக்கு, L&I இன் கோவிட்-19ஐத் தடுப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல் (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் பணியாளர்கள் அணியும் முகமூடிகள் மற்றும் முகக்கவச நிபந்தனைகள் தொடர்பான கோவிட்-19 பொதுவான கேள்விகள் (ஆங்கிலத்தில் மட்டும்) ஆகியவற்றைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்.

### உள்ளூர் பொது சுகாதார நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள்

உள்ளூர் சுகாதார அதிகாரிகள் தங்கள் அதிகார எல்லைக்குள் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், தடுப்பதற்குமான சுகாதார உத்தரவுகளை இடுவதற்கு அதிகாரம் கொண்டுள்ளனர். இந்த உத்தரவுகள் மாகாணம் தழுவிய உத்தரவுகளை விட மிகவும் கண்டிப்பானதாக இருக்கலாம், ஆனால் கண்டிப்பு குறைவாக இருக்காது. உள்ளூர் சுகாதார சட்ட அதிகார அமைப்புடன் (ஆங்கிலத்தில் மட்டும்) சரிபார்த்து, அந்தப் பகுதிக்கான அனைத்து சுகாதார உத்தரவுகளையும் பின்பற்றவும்.

## பரிந்துரைகள்

இந்த நேரத்தில் குறிப்பிட்ட அமைப்புகளில் உள்ள முகக்கவச பயன்பாட்டிற்கான தேவைகளை மேலே உள்ள தகவல்கள் குறிப்பிடும் அதே வேளையில், பின்வரும் தகவல்களைப் பரிசீலனை செய்வதற்கான பொது சுகாதார பரிந்துரைகளைப் பற்றி கூறுகின்றன.

### சுகாதாரப் பராமரிப்பு அல்லாத கூட்டமாக வாழும் அமைப்புகளுக்கான முகக்கவசப் பரிந்துரைகள்

பின்வரும் அமைப்புகளில் சாத்தியம் இருக்கும்போது, உள்ளரங்குகளிலும் முகக்கவசங்கள் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது. தயவு செய்து கீழே உள்ள துறை-சார்ந்த வழிகாட்டுதலைப் பார்க்கவும்.

- வீடற்றவர்களுக்கான சேவை வழங்குநரின் தளங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்)
- வணிக கடல்சார் இடங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்)(எ.கா., வணிக கடல் உணவுக் கப்பல்கள் (ஆங்கிலத்தில் மட்டும்), சரக்குக் கப்பல்கள், பயணக் கப்பல்கள்)
- வேலையின் தன்மை காரணமாக தனி மனித இடைவெளி சாத்தியமில்லாத கிடங்குகள், தொழிற்சாலைகள் மற்றும் உணவு பேக்கேஜிங் மற்றும் இறைச்சி பதப்படுத்தும் இடங்கள் போன்ற தனிமனித இடைவெளி சாத்தியமில்லாத கூட்டமாக சேர்ந்து வேலைபார்க்கும் இடங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்)
- பணி விடுவிப்பு வசதிகள், இடைநிலை வீடுகள், சிறார் மறுவாழ்வு அல்லது சீர்திருத்த பள்ளிகள், மற்றும் தற்காலிக தொழிலாளர் குடியிருப்புகள் உட்பட கூட்டமாக வாழும் இடங்கள் (படுக்கையறைகள் தவிர) பகிரப்பட்ட வாழும் இடங்கள்
- வயது வந்தோருக்கான சிறைச்சாலைகள், வயது வந்தோர் சிறைகள், சிறார் மறுவாழ்வு வசதிகள் அல்லது சிறார் சீர்திருத்த பள்ளிகள் போன்ற மக்கள் அடைக்கப்பட்டிருக்கும் அமைப்புகளின் உட்புறங்கள் (எ.கா. நீதிமன்ற அறைகள்).

மேலே உள்ள அமைப்புகளில் வசிப்பவர்கள் அல்லது பணிபுரிபவர்கள் இந்த அமைப்புகளில் இல்லாதபோது (எ.கா., சமூகத்தில் இருக்கும்போது) பொது மக்கள் பின்பற்றும் அதே பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டும். பெருந்தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற சில சூழ்நிலைகளில் பொது சுகாதார அதிகாரிகளுக்கு முகக்கவசம் தேவைப்படலாம்.

மக்கள் கூடும் சுகாதாரப் பராமரிப்பு அல்லாத நிறுவனங்கள் (வணிகங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவை) ஆகியவற்றின் அமைப்புகளில் முகக்கவசம் தேவைப்படலாம். இந்த நிறுவனங்கள் தங்கள் அமைப்பில்

முகக்கவசங்கள் தேவையா என்பதை தீர்மானிக்கும் போது பின்வரும் அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்:

- அமைப்பில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு
    - கோவிட்-19 தடுப்பூசிகளின் சமீபத்திய புதுப்பிப்பு தடுப்பூசி வரை செலுத்திக் கொள்ளாதவர்கள், கோவிட்-19 க்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர் மேலும் தீவிரமான நோய்களுக்கு ஆளாவர்கள்
    - சில மருத்துவ உடல் நிலையைக் கொண்டவர்கள் தீவிரமான கோவிட்-19 நோய்க்கான அதிக ஆபத்தில் உள்ளனர்
- அமைப்பில் உள்ள காற்றோட்டத்தின் தரம் - கோவிட்-19 பரவுவதைக் குறைப்பதற்கான காற்றோட்டம் மற்றும் காற்றின் தரத்தை (wa.gov) பார்க்கவும் (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் கட்டிடங்களில் காற்றோட்டம் | வெப்பமாகுதல், காற்றோட்டம் மற்றும் ஏர் கண்டீஷனிங் அமைப்புகள் இருக்கின்ற மற்றும் இல்லாத இரண்டு வசதிகள் உட்பட தகவல்கள் மற்றும் காற்றோட்டம் விருப்பத்தேர்வுகளுக்கான CDC
- அமைப்பில் தனிமனித இடைவெளியைக் கடைபிடிக்கும் மக்களின் திறன்
- அமைப்பில் சந்தேகத்திற்கிடமான அல்லது உறுதிப்படுத்தப்பட்ட கோவிட்-19 பெருந்தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு- சுகாதாரப் பராமரிப்பு அல்லாத கூட்டமாக வாழும் அமைப்பில் பெருந்தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டால், உட்புறங்களில் முகக்கவசத்தைப் பயன்படுத்துவது கடுமையாக பரிந்துரைக்கப்படுகிறது
- சமூகத்தில் நோய்த் தொற்று அளவு அதிகமாக இருக்கும்போது, தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல், அனைத்து மக்களும் வீட்டிற்குள் முகக்கவசங்களை அணியுமாறு CDC மற்றும் DOH பரிந்துரைக்கின்றன. CDC சமூக கோவிட்-19 நோய்த் தொற்று அளவுகள் பார்க்கவும்

தனி நபர்கள் முகக்கவசங்களை அணிவதைத் தேர்வுசெய்தால், இந்நிறுவனங்கள் அவர்களை தடுக்கக்கூடாது. தனி நபர்களுக்கான முகக்கவசப் பரிந்துரைகள் மற்றும் ஆபத்து அடிப்படையிலான பரிசீலனைகளுக்கு கீழே பார்க்கவும்.

## தனி நபர்களுக்கான முகக்கவசப் பரிந்துரைகள்

அறிகுறிகள், பாசிட்டிவ் பரிசோதனை அல்லது கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் வெளிப்பட்டவர்கள் நீங்கள் கோவிட்-19 பரிசோதனையில் பாசிட்டிவ் பெற்றால் என்ன செய்வது (ஆங்கிலத்தில் மட்டும்), கோவிட்-19 கொண்ட ஒருவருடன் நீங்கள் வெளிப்படும் சாத்தியம் இருந்தால் என்ன செய்வது (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் கோவிட்-19 அறிகுறி முடிவுகாண் மரங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப முகக்கவசத்தை அணிய வேண்டும். தனிநபர்கள் தாங்கள் இருக்கும் அமைப்பிற்காக தேவைப்பட்டால் முகக்கவசத்தை அணிய வேண்டும். தகவல்கள் தேவைகளுக்கு தற்போதைய ஆணைகள் மற்றும் சுகாதார உத்தரவுகள் பகுதியைப் பார்க்கவும்.

மேற்கூறிய சூழ்நிலைகள் பொருந்தாவிட்டாலும் கூட, தனிப்பட்ட அல்லது சமூகத்தின் ஆபத்து நிலையினால் தெரிவிக்கப்படும், தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மக்கள் முகக்கவசத்தை அணியலாம். தனிப்பட்ட நபர்கள் முகக்கவசங்கள் தேவையா என்பதை தீர்மானிக்கும் போது பின்வரும் அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்:

- தனிப்பட்ட நபர்கள், குடும்பம், நண்பர்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள மற்றவர்களின் தடுப்பூசி நிலை - கோவிட்-19 தடுப்பூசிகளின் சமீபத்திய புதுப்பிப்பு வரை செலுத்திக் கொள்ளாதவர்கள், கோவிட்-19 க்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர் மேலும் தீவிரமான நோய்களுக்கு உள்ளாகின்றனர்
- கடுமையான கோவிட்-19 நோயின் அபாயத்தை அதிகரிக்கச் செய்யும் தனிப்பட்ட நபர்களின் மருத்துவ நிலைமைகள் மற்றும் குடும்பம், நண்பர்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள பிறரின் மருத்துவ நிலைமைகள்
- நீங்கள் இருக்கும் அமைப்பின் தன்மைகள் (எ.கா., நெரிசல், மோசமான காற்றோட்டம் கொண்ட இடம்)
- சமூகத்தில் நோய்த் தொற்று அளவு அதிகமாக இருக்கும்போது, தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல், அனைத்து மக்களும் வீட்டிற்குள் முகக்கவசங்களை அணியுமாறு CDC மற்றும் DOH பரிந்துரைக்கின்றன. CDC சமூக கோவிட்-19 நோய்த் தொற்று அளவுகளைப் பார்க்கவும்

## கோவிட்-19 பற்றிய கூடுதல் தகவல்கள் மற்றும் ஆதாரவளங்கள்

வாஷிங்டனில் கோவிட்-19 இன் தற்போதைய நிலை (தமிழ்), ஆளுனர் Inslee-இன் பிரகடனங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்), அறிகுறிகள் (ஆங்கிலத்தில் மட்டும்), எவ்வாறு அது பரவுகின்றது (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் எவ்வாறு மற்றும் எப்போது மக்கள் பரிசோதிக்கப்பட வேண்டும் (ஆங்கிலத்தில் மட்டும்) ஆகியவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ளுங்கள். மேலதிக தகவல்களுக்கு, எங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை (ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பார்வையிடுங்கள்.

ஒரு நபரின் வர்க்கம்/இனம் அல்லது தேசியம், போன்றவை தானே சுயமாக, அவர்களுக்கு கோவிட்-19 ஏற்படுவதற்கான ஆபத்தை அதிகரிக்கச் செய்யாது. எவ்வாறாயினும், கோவிட்-19 ஆல் நிற சமூகங்கள் விகிதாசாரமாக பாதிக்கப்படுவதை தரவு வெளிப்படுத்துகிறது, இனவெறியின் விளைவுகளாலும், குறிப்பாக கட்டமைப்பு இனவெறியினால், சில குழுக்கள்

தங்களையும், தங்கள் சமூகங்களையும் பாதுகாக்க குறைந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளமை இதற்கு காரணமாகும். களங்கம் விளைவித்தல் இந்நோய் நிலைமையைத் தடுப்பதில் உதவாது (ஆங்கிலத்தில் மட்டும்). வதந்திகள் மற்றும் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தடுக்க மிகச் சரியான தகவல்களை மட்டுமே பகிரவும்.

- வாஷிங்டன் மாகாண Department of Health 2019 நாவல் கொரோனா வைரஸ் பெருந்தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு (கோவிட்-19) (தமிழ்)
- வாஷிங்டன் மாகாண கொரோனா வைரஸ் எதிர்வினை (கோவிட்-19) (தமிழ்)
- உங்களது உள்ளூர் அல்லது மாவட்ட சுகாதாரத் துறையைக் கண்டறியுங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்)
- CDC கொரோனா வைரஸ் (கோவிட்-19) (ஆங்கிலத்தில் மட்டும்)
- எளிதாக அணுகக்கூடிய, காதுகேளாதவர்களுக்கு ஏற்ற முகமூடியை (HSDC) எவ்வாறு உருவாக்குவது (ஆங்கிலம் மட்டும்)

**மேலும் கேள்விகள் உள்ளதா?** எங்கள் கோவிட்-19 தகவல் ஹாட்லைனை அழைக்கவும்: **1-800-525-0127**
திங்கள் - காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை, செவ்வாய் – ஞாயிறு மற்றும் அனுசரிக்கப்படும் மாகாண விடுமுறைகள் (ஆங்கிலத்தில் மட்டும்), காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலான விளக்க சேவைகளுக்கு, அவர்கள் பதிலளிக்கும் போது **# ஐ அழுத்தி உங்களது மொழியைச் சொல்லுங்கள்.** உங்கள் உடல்நலம், கோவிட்-19 பரிசோதனை அல்லது பரிசோதனை முடிவுகள் குறித்த கேள்விகளுக்கு, தயவுசெய்து ஒரு சுகாதார வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும்.

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

## பின் இணைப்பு A: சொற்களஞ்சியம்

### சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு

Secretary of Health's Mask Order (முகக்கவசம் பற்றிய சுகாதார செயலாளரின் உத்தரவு) (ஆங்கிலம் மட்டும்) இன்படி, சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள் மற்றும் நீண்ட கால பராமரிப்பு அமைப்புகள் என்பது சில விதிவிலக்குகளுடன், மக்களுக்கு தனிப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொது அல்லது தனியார் அமைப்பாகும். மருத்துவமனை போன்ற சுகாதார-பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு சேவையகத்தில் அமைந்திருந்தால், அந்த சேவையகத்தின் முழுப்பகுதியும் ஒரு சுகாதார அமைப்பு அல்லது நீண்ட கால பராமரிப்பு அமைப்பாக கருதப்படும், மற்றும் இந்த சேவையகம் முழுவதும் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு முகக் கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும், மேலும் இங்கு முகக்கவச உத்தரவுகளும் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டது. மளிகைக் கடையில் உள்ள மருந்தகம் அல்லது பள்ளி செவிலியர் அலுவலகம் போன்ற மற்றொரு நோக்கத்திற்காக முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு சேவையகத்தில் அமைந்திருந்தால், சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு அல்லது நீண்ட கால பராமரிப்பு அமைப்பானது, சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படும் பகுதிகளை மட்டுமே உள்ளடக்கும், மற்ற பகுதிகள் இதில் உள்ளடங்காது. சுகாதாரப் பராமரிப்பு வழங்குவதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படும் பகுதிகளில் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு முகக் கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும், மேலும் முகக்கவச உத்தரவும் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டது. கீழே விலக்கப்படாத வரை, சுகாதாரப் பராமரிப்பு நிபுணத்துவ தகுதிச்சான்றிதழ் நிபந்தனைகள் (ஆங்கிலத்தில் மட்டும்) பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள தகுதிச்சான்றிதழ்களைக் கொண்ட நபர்கள் மேலும் தகுதிச் சான்றிதழ் இல்லாமல் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்க சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட தனிநபர்கள் ஆகியோரும் அடங்குவர். **சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்களும், சுகாதார அமைப்புகளின் உட்புறங்களில் இருக்கும்போது முகக்கவசத்தை அணிய வேண்டும்.**

பின்வருபவை பிரத்தியேகமற்ற சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள் மற்றும் நீண்ட கால பராமரிப்பு அமைப்புகளின் பட்டியல் ஆகும்:

- மருத்துவமனைகள் மட்டும் அல்லாமல் அவைகளையும் உள்ளிட்ட, தீவிர சிகிச்சைக்கான சிகிச்சையகங்கள்;
- நீண்ட கால தீவிர சிகிச்சைக்கான சிகிச்சையகங்கள்;
- உள்நோயாளிகளின் மறுவாழ்வு சிகிச்சையகங்கள்;
- மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்கான சிகிச்சையகங்கள், குடியிருப்பு சிகிச்சைக்கான சிகிச்சையகங்கள், பாதுகாப்பான போதை மறுவாழ்வு சிகிச்சையகங்கள் போன்றவை மட்டுமன்றி, இவைகளையும் உள்ளிட்ட உள்நோயாளிகளின் மனவளம் சார்ந்த சுகாதார சிகிச்சையகங்கள்;
- மருத்துவ இல்லங்கள், உதவி பெற்று வாழும் ஆதரவு இல்லங்கள், வயது வந்தோர்களுக்கான குடும்ப இல்லங்கள், சான்றளிக்கப்பட்ட சமூக குடியிருப்பு சேவைகள் மற்றும் ஆதரவுகள் வழங்கப்படும் அமைப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவை வசதிகள் போன்றவை மட்டுமன்றி, இவைகளையும் உள்ளிட்ட நீண்ட கால பராமரிப்பு வசதிகள்;

- நடமாடும் கிளினிக்குகள் அல்லது சுகாதார சேவை வழங்கப்படும் பிற வாகனங்கள்;
- டயாலிசிஸ் மையங்கள், மருத்துவர் அலுவலகங்கள் மற்றும் மனநலம் சார்ந்த சிகிச்சையகங்கள் (மனநல மருத்துவர்கள், மனநல ஆலோசகர்கள் மற்றும் பொருள் பயன்பாட்டுக் கோளாறு நிபுணர்களின் அலுவலகங்கள் உட்பட) போன்றவை மட்டுமன்றி, இவைகளையும் உள்ளிட்ட வெளிநோயாளிகளுக்கான சிகிச்சையகங்கள்;
- பற்கள் மற்றும் அவைகளுக்கான சிறப்பு சிகிச்சையகங்கள்;
- ஆப்டோமெட்ரி மற்றும் கண் மருத்துவ சிகிச்சையகங்கள்;
- மருந்தகங்கள் (சில்லறை விற்பனை பகுதிகள் உட்பட);
- மசாஜ் தெரபி அலுவலகங்கள் (ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய/உடற்பயிற்சி மையங்கள் போன்ற மருத்துவசேவை அல்லாத அமைப்புகளுக்குள் மசாஜ் செய்ய நியமிக்கப்பட்டுள்ள பகுதிகளும் இதில் அடங்கும்);
- சிரோபிராக்டிக் அலுவலகங்கள்;
- பேறுகால மருத்துவப் பணியியல் மற்றும் தனித்துவ பிரசவ மையங்கள்;
- தனிமைப்படுத்தல் மற்றும்/அல்லது விலகியிருப்பதற்கான இடங்கள்;
- நடமாடும் அறுவை சிகிச்சையகங்கள்;
- அவசர சிகிச்சை மையங்கள்;
- விருந்தோம்பல் பராமரிப்பு மையங்கள்; மற்றும்
- வீட்டுச் சுகாதார பராமரிப்பு, பராமரிப்பு இல்லம், தனிப்பட்ட பராமரிப்பு அல்லது விருந்தோம்பல் சேவைகள் போன்ற கட்டண அடிப்படையில் சேவை வழங்கும் அமைப்புகள்.

சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள் மற்றும் நீண்ட-கால பராமரிப்பு அமைப்புகளில் பின்வருவன அடங்கும்:

- விளையாட்டு மற்றும் பார்வையாளர் நிகழ்வுகள் அல்லது பிற கூட்டங்கள் நடைபெறும் அமைப்புகள் (தகுதிச்சான்றிதழ் பெற்ற தடகள பயிற்சியாளர்கள் வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது உட்பட), முதன்மையாக சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் பகுதிகள் தவிர, ஒதுக்கப்பட்ட முதலுதவி பகுதிகள் (இவை சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள்);
- Department of Children, Youth & Families (DCYF, குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் துறை)-உரிமம் பெற்ற வளர்ப்பு இல்லங்கள், அவை சுகாதார சேவைகளை முதன்மையாக வழங்குவதில்லை;
- மக்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு வழங்காத ஆராய்ச்சிக் கூடங்கள்;
- கால்நடை மருத்துவ பராமரிப்பு அமைப்புகள்;
- விலங்கு கட்டுப்பாட்டு முகவர்கள்;
- இலாப நோக்கம் இல்லாத மனிதநேய சமூகங்கள்; மற்றும்
- மருத்துவ கஞ்சா ஆலோசக சேவைகளை வழங்கும் கஞ்சா சில்லறை விற்பனை நிலையங்கள் உட்பட.

சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளில் முகக்கவசங்கள் தேவைப்படும் பட்சத்தில், நீங்கள் அவர்களின் வணிக விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். கூடுதல் தகவல்களுக்கு மேலே உள்ள "அறைகளின் விதிமுறைகளைப்" பார்க்கவும். மூலக் கட்டுப்பாட்டு வழிகாட்டுதல் (ஆங்கிலத்தில் மட்டும்) மற்றும் சில சுகாதாரப் பராமரிப்பு வசதிகளைப் பார்வையிடுவதற்கான வழிகாட்டுதல் உள்ளிட்ட விரிவான வழிகாட்டுதலுக்கு,

சுகாதாரப் பராமரிப்பு அமைப்பின் கோவிட்-19 தொற்று தடுப்புப் பக்கத்தை (ஆங்கிலத்தில் மட்டும்) பார்வையிடவும்.

### அறைகளின் விதிமுறைகள்

வணிகங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் நிறுவன அமைப்புகள் தங்கள் நிறுவனத்தில் அல்லது வசதிகளில் முகக்கவசங்களை அணிவதற்கான சொந்த விதிமுறைகளை அமைக்க உரிமை உண்டு. வணிகங்கள் L&I உத்தரவுகளில் (ஆங்கிலத்தில் மட்டும்) உள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும், மேலும் முகக்கவசம் பற்றிய சுகாதார செயலாளரின் உத்தரவை (ஆங்கிலத்தில் மட்டும்) விட அதிகப் பாதுகாப்புடன் இருக்க அமைப்புகளில் (எ.கா. திறந்த வெளியில்) முகக்கவசங்கள் அணிவதைத் தேர்வுசெய்யலாம்.

உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகள் சமூகத்தில் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த அதிக பாதுகாப்புள்ள முகக்கவச உத்தரவுகளை இடலாம். இந்த விதிமுறைகள் முகக்கவசம் பற்றிய சுகாதார செயலாளரின் உத்தரவை (ஆங்கிலத்தில் மட்டும்) விட அதிக பாதுகாப்பை அளிக்கும், ஆனால் அவை குறைவான பாதுகாப்பை அளிக்காது.

கூடுதலாக, சில நபர்கள் முகக்கவசத்தைத் தொடர்ந்து அணிய வேண்டியோ அல்லது தேர்வு செய்ய வேண்டியிருக்கலாம். மாகாண அல்லது உள்ளூர் முகக்கவச ஆணைகள் செயலில் இல்லாதபோதும் பொது இடங்களில் முகக்கவசம் அணிவதைத் தேர்வுசெய்யும் உரிமை அவர்களுக்கு உண்டு. தங்களை, தங்கள் குடும்பம் மற்றும் சமூகங்களைப் பாதுகாக்க முகக்கவசம் அணியும் அவர்களின் விருப்பத்தை தயவுசெய்து மதிக்கவும். நீங்கள் முகக்கவசம் அணிவதைத் தேர்வுசெய்தால், அடையாளம் காணும் நோக்கங்களுக்காக அதை சிறிது நேரம் அகற்றும்படி கேட்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.